"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பது விருதா" ஸ்தாபிதம்: 1876

சத்தியவேத பாது காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G.P.O. AS A NEWSPAPER

சத்தியவேத
பாதுகாவலன்
வருடசந்தா
இலங்கை: வெளிநாடுகள்:
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)
தனிப்பிரதி சதம் 15

89-ம் புத். ‖ யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு ஆவணிமீ 8-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 ‖ 31-ம் இல.

# தொழிற்சங்கங்களைப் பாராட்டுகின்றார்

# பரிசுத்த பாப்பரசர்

பிரான்சுதேசத்திலே, லியொன்ஸ் நகரிலே சென்றவாரம் நடந்த கத்தோலிக்க தொழிலாளர் வாரவிழாவுக்குப் பரிசுத்த பாப்பரசர் ஒருசெய்தி அனுப்பியிருந்தார். அதில் முறையாக நடத்தப்படும் தொழிற்சங்கங்கள் மிகவும் அவசியமானவை எனக்கூறி உலக தொழிற்சங்கங்களுக்கும், முதலாளிவர்க்கத்தினருக்கும், அரசாங்கங்களுக்கும் நற்புத்தி புகட்டினார் பரிசுத்தபிதா.

## தொழிற்சங்கங்கள்:

"தொழிற்சங்கங்கள் தேசநன்மையைக்கருதியும், சர்வதேச நன்மையைக்கருதியும், தத்தம் அரசாங்கங்களுக்கு முட்டுக்கட்டைகளாக இராது ஒத்துழைக்கக் கடமைப்பட்டிருக்கின்றன. இன்றைய சமூகத்தில் அவைகள் அடைந்திருக்கும் முக்கியத்துவத்தை மனக்குரோதத்துடனும், அதிகாரிகளை எதிர்க்கவேண்டுமென்ற எண்ணத்துடனும் உபயோகியாது, தேசமுன்னேற்றத்தையும், சர்வதேச நன்மையையும் இலக்குகளாகக்கொண்டு உழைக்கவேண்டும்.

## முதலாளிவர்க்கத்தினர்

நாட்டின் முன்னேற்றத்திற்குப் பரந்த அறிவுடைய முதலாளிவர்க்கம் இன்று அவசியம். இன்றையஉலகில் தொழிலாளர்களும், அவர்களது சங்கங்களும் வகிக்கும் முக்கியத்துவத்தை அறிந்து, அவர்களுடன் நியாயமாக நடந்துகொள்வது உசிதம். தேசிய, சமூக, பொருளாதார திட்டங்களை வகுக்கும்போது தொழிற்சங்கங்களுக்கும் அவைகளுக்குரிய இடத்தை அளிக்கவேண்டும்.

## அரசாங்கங்கள்

தொழிற்சங்கங்களின் ஆதரவை விரும்பாத அரசாங்கங்கள் இன்று இல்லை. ஆனால், அந்த ஆதரவைப் பெறுவதற்காகப் பிறருக்கு அநீதிசெய்தல் தகாது. தனிமனிதனின் சுதந்தரத்தைக் கூடியளவு பேணிநடத்தல் நல்ல அரசாங்கங்களின் கடமையாகும்.

# திருச்சபையில் முறைகள் மாறுகின்றனவா?

திருச்சபையின் முறைகள் சில மாறலாம். ஆனால், அதன்போதனைகள் ஒருபோதும்மாறமாட்டா. திருச்சபையின் முறைகளிற்சில மாறுவதைக்கண்டு சிலர் ஏங்கிப் போகின்றனர். காலையில் நடந்த பூசைகள் இப்போது மாலையிலும் நடக்கின்றனவாம். ஞானஸ்நானம், மரண அடக்கம் முதலிய சடங்குகளில் சுயபாஷை உபயோகமாம்?

விரைவில் பூசைப்பலியில் சில பாகங்கள் தன்னும் சுயபாஷையிலாம். இம்மாறுதல்கள் சிலருக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் வியப்புக்கோ, அதிர்ச்சிக்கோ சற்றேனும் இடமில்லை.

நாம் மாறும் உலகத்தில் இருக்கிறோம் என்பதை மறக்கப்படாது. உலகம் சகல விஷயங்களிலும் மாறிக்கொண்டேபோகின்றது. நாம்பேசும் பாஷையிலேதன்னும் மாற்றம் இல்லையா? எமது முன்னோர் உண்டு, உடுத்தி, வாழ்ந்துவந்த முறையிலா நாம் இன்று உண்பதும், உடுத்துவதும், வாழ்ந்துவருவதும். ஆகவே, திருச்சபையின் முறைகளிலும் காலத்துக்கு ஏற்ற முறையில், காலத்துக்குக்காலம் மாற்றம் ஏற்படுவது இயல்பே. ஆனால், உலகில் ஒன்றில் மட்டும் அதாவது, திருச்சபையின் போதனைகளில் மாத்திரம் ஒருபோதும் மாற்றம் ஏற்படமாட்டாது.

# எங்கும்போல் அங்கும் எத்தியோப்பிய கத்தோலிக்கர் தேசாபிமானமுடையவர்

இவ்வாறு 6-வது சின்னப்ப பாப்பரசர் அண்மையில் வத்திக்கான் மாளிகையில் எத்தியோப்பிய புதியவத்திக்கான் மந்திரியை வரவேற்கையில் அங்குள்ள கத்தோலிக்கரைப்பற்றிக் கூறினார்.

சிலவாரங்களின்முன் எத்தியோப்பிய மன்னர் ஹெயிலி சலாசி கத்தோலிக்க திருச்சபை தனது தேசத்தில் செய்துவரும் வேலையைப் பெரிதும் பாராட்டியிருந்தார். பாப்பரசர் மந்திரியாருக்கு இப்பாராட்டை நினைப்பூட்டி, திருச்சபை செய்துவரும் வேலைகளுக்கு மன்னர்பிரான் அளிக்கும் ஆதரவுக்கு நன்றிதெரிவித்தார். மேலும், ஆபிரிக்கநாடுகள் அண்மையில் எத்தியோப்பியாவில் மகாநாடுகூடியது சந்தோஷத்துக்குரிய விஷயமென்றார் பாப்பரசர். எத்தியோப்பியாவின் பரந்த மனப்பான்மையை மறுசில ஆபிரிக்க தேசங்களும் பின்பற்றுமென்ற நம்பிக்கையே அம்மகிழ்ச்சியின்காரணம்.

## சூடான் நிலையில் சற்று மனமாற்றம்

சென்ற பங்குனிமாதத்தில் சூடான் தேசத்திலிருந்து பிறதேச கத்தோலிக்க குருமார் சந்நியாசிகள் 300 பேர் நாடுகடத்தப்பட்டனர். சென்றவாரம் கிடைத்த செய்திகள் சற்று உற்சாகம் ஊட்டத்தக்கனவாய் இருக்கின்றன. ஏனெனில், சூடான் அரசாங்கம் மீளவும் 100 குருமாரை ஏற்றுக்கொள்ளச் சம்மதம் தெரிவித்திருக்கின்றது. நாடுகடத்தப்பட்ட குருமாரிற் பலர் அநேக வருடகாலம் சூடான்தேசத்தில் தொண்டுசெய்துவந்தவர்கள். நாடுகடத்தப்பட்டபோது அத்தேசத்தை விட்டுச்செல்ல நேரிட்டதற்குக் கண்ணீர் வடித்தனர். இவர்களுட்பலர் இப்போது பிற இடங்களில் வேலைசெய்து வருகின்றனர்.

# ஆபிரிக்க நாடுகளில் கல்விவளர்ச்சி

ஆபிரிக்கநாடுகள் ஒன்றின்பின் ஒன்றாக அரசியல்விடுதலைபெற்று வருகின்றன. இந்த வேகத்துக்கு ஏற்றமுறையில் கல்வியையும் வளர்த்துவரப் புதியதேசங்களில் ஆர்வம் தோன்றியிருக்கின்றது. இம்முயற்சியில் கத்தோலிக்க திருச்சபை தம்மாலானஉதவிகள் யாவையும் அளித்துவருகின்றது. சிற்சில இடங்களில் சட்டங்கள் வேதபோதகத்துக்குச்சாதகமாகவில்லை. தங்கநயிக்காவில் பெற்றோருடைய அனுமதியின்றி மாணவர் எவரும் மதமாற்றம் செய்யப்படாது என்னும் விதி உண்டு. இத்தகைய சட்டங்கள் இருப்பினும் திருச்சபை ஏராளமான கல்விநிலையங்களை அத்தேசங்களில் நடப்பித்துவருகின்றது. பாடசாலைகளில் உயர் வகுப்பு மாணவர்களுக்குக் கல்வி புகட்ட ஏராளமான பிறநாட்டு ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.

## வட அயர்லாந்தில் நல்லுணர்ச்சி

வடஅயர்லாந்து பாரம்பரியமாகப் புரொட்டஸ்தாந்து மதக்கோட்டைகளில் ஒன்று. கத்தோலிக்க துவேஷம் இங்குபெரிது. ஆனால், அண்மையில் இத்துவேஷம் குறைந்துகொண்டு வருவதைப் பலர் அவதானித்துவருகின்றனர். கிறிஸ்தவசபைகளின் ஒற்றுமை இயக்கத்தில் அப்பகுதிப் புரொட்டஸ்தாந்தர்கள் வியப்புக்குரியமுறையில் பங்குபெறுகின்றனர். ஆடிமாதம் 12-ந்திகதி அங்குள்ள புரொட்டஸ்தாந்தரின் பெரும்தினம். அன்று நடந்த பிரமாதமான கூட்டம் ஒன்றில் "கத்தோலிக்கருடன் சிநேகபான்மையில் சீவிக்கிறதற்கு நாம் சகல வழிவகைகளையும் கூடியளவு உபயோகித்துக்கொள்ள வேண்டும்" என்று முடிவுசெய்தனர்.

# வத்திக்கான்சங்கத்தில் கல்வினிஸ்ற்சபை தலைவர் அவதானிகளில் ஒருவர்

83 வயது நிறைந்த மார்க் பொலிக்னர் என்னும் கல்வினிஸ்ற் சபைப் பிராஞ்சுதேச பாதிரியார் வத்திக்கான்சங்க அவதானிகளில் ஒருவராகக் கடமையாற்ற அனுப்பப்பட்ட அழைப்பை ஏற்றுக்கொண்டார். இவர் அகில உலக கிறிஸ்தவ சபைகளின் சங்கத்தின் முன்னைநாள் தலைவர். பிராஞ்சுதேச புரொட்டஸ்தாந்து சபைகளின் தலைவராகவும் கடமையாற்றிய கண்ணியமிக்க பாதிரியார் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆவணிமாதம் — 1964.

| | | | |
|---|---|---|---|
| 9 | ஞா. | பெந்தக்கோஸ்துவுக்குப்பின் 12-ம் ஞாயிறு | [ப] |
| 10 | தி. | அர்ச். லவுறேஞ்சியார் | [சி] |
| 11 | செ. | காலதினம் | [ப] |
| 12 | பு. | அர்ச். கிளாரம்மாள் | [வெ] |
| 13 | வி. | காலதினம் | [ப] |
| 14 | வெ. | தேவமாதா ஆரோபண ஆயத்ததினம் | [ஊ] |
| 15 | ச. | தேவமாதா ஆரோபணத் திருநாள் | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

**1964-ம் ஆண்டு ஆவணி மாதம் 8-ந் திகதி**


## மகத்தான தினம்

மனிதரின் வாழ்வில் மகத்தான தினம் யாது? அவனது மரண தினம்தான். புனிதரின் வாழ்க்கையிலும் சரி, பாவியின் சீவியத்திலும்சரி சாவின் தினமே மிக மிக முக்கியமானது.

புனிதரின் மரணதினம் வெற்றியைக் கொண்டாடும் நாளாகும். பாவியின் மரணதினமோ பயங்கரத்தை அடையும் நாளாகும்.

மரியன்னையின் வாழ்விலும் அத்தினம் முக்கியகரமானது. அவர் மரித்து ஆன்ம சரீரத்தோடு பரலோகத்துக்கு எழுந்தருளின நாள் கத்தோலிக்கரால் மகிழ்ச்சியோடு கொண்டாடப்படும் தினம்ஆகும்.

மரியன்னை மற்றையோர் போல மரணத்துக்குள்ளாயிருக்க மாட்டார் என சில வேதசாஸ்திரிகள் கூறுகிருர்கள். மரணம் என்பது பாவத்தின் தண்டனையாகும்.

மரியன்னை பாவமாசு அணுகாதவர். எனவே அவரை மரணம் எப்படி ஆட்கொள்ளும்? என இவர்கள் வாதிக்கின்ருர்கள்.

பாவிகட்காகத் தேவகுமாரன் மரணத்துக்குள்ளானுர். மனித வாழ்வுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கிய தேவஅன்னையும் தம் திருக்குமாரன் போல மரணித்து மரணத்தை வெல்லும் வழிகளைக் காட்டியுள்ளார்.

இது வேறுசில வேதவல்லுநர்களின் கூற்று ஆகும்.

"தூசியிலிருந்து உதித்தாய். தூசியாகவே போவாய்" என முதல் மனிதன்மூலம் மனுக்குலத்தோர் சாவு என்ற தண்டனையைப் பெற்றனர்.

மரியன்னை இந்த வரம்புக்கு அப்பாற்பட்டவள். எக்காலத்தும் புனிதம் கெடாதவளாக விளங்கியவள். அவளது புனிதஉடல் தேவன் வதிந்த ஆலயமாயிருந்தது.

அப்புனிதையின் இறுதித்தினம் உண்மையிலேயே மகத்தானதாயிருந்திருக்கும். ஆயினும் துரதிர்ஷ்டமாக வேதநூல்களில் விரிவானது எதுவும் காணேம்.

தேவதாய் சரீரத்தோடு பரலோகம் சென்ருர் எனத் திருச்சபையார் ஆண்டாண்டுகாலமாக விசுவசித்துவந்தனர். அண்மையில் இது விசுவாச சத்தியமாகவும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

கடைசித்தினம்பற்றி திருச்சபை இவ்விதம் கூறுகிறது. தேவதூதரின் எக்காளத்தொனிகேட்டு அனைவரும் உயிர்ப்பர். அவர்களது சடலங்களுள் ஆன்மாக்கள் மீண்டும் புகும்.

புனிதர்கள் எக்காலமும் அழியா இன்பம் பெறுவர். மரியன்னையை அவள்திருக்குமாரன் முகமுகமாகத் தரிசிக்கும் பாக்கியம் அவர்களுடையது.

பாவிகள்? அவர்களுக்கு அத்தினம் பயங்கரமானது. ஆம். மிகமிகப் பயங்கரமானது.

மரியன்னையின் மகத்தான தினம் நெருங்குகிறது. அப்புனிதை மரணத்தை வென்றதினம் அது.

மரியன்னையின் பக்தர்கள் அத்தினத்தை மகத்தான விதமாகக் கொண்டாடுவர். கொண்டாடுவதுடன் பொறுப்பு முடிந்துவிடாது.

அன்னைபோன்று அவர் மைந்தர்களாகும் நாமும் மரணத்தை வெல்லவேண்டும். மரணத்தின்பின் மகத்தான வாழ்வு பெறுதல் வேண்டும்.

மரியன்னையின் வாழ்க்கைமுறை அதற்கு ஒரு சிறந்த வழி காட்டி.

# கிறீஸ்தவ மனிதன்

ஜே. கே. யோசவ்

இறைவனின் சிருஷ்டிகள் தன்னைப் படைத்த சிருஷ்டிகரின் நோக்கத்தைத் தத்தமக்கு அளிக்கப்பட்டிருக்கும் தன்மைகளுக்கேற்ப நிறைவேற்றும் வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. சாதாரண சடப் பொருளாகிய கல்லும் தான் கல்லாயிருக்கும் ஒரே காரணத்தால் ஆண்டவனின் நோக்கத்தைப் பூர்த்தியாக்குகின்றது ஆயினும் அது தன் நோக்கத்தையும், எதற்காகத் தன்னைக் கடவுள் சிருட்டித்தார் என்பதையும் அறியக் கூடாததாய் இருக்கின்றது. வளர்ந்து, உணவுண்டு, சுவாசித்துத் தன் இனத்தைப் பெருக்கும் அளவுக்கு உயிருடைய தாவரமும் தான் தாவரமாய் இருக்கும் கடமையைப் பூர்த்திசெய்து இறைவன் தனக்கு வகுத்த வாழ்வின் நோக்கத்தில் இருந்து பிறழாமல் இருக்கிறது. ஆனல் அதுவும் தன் நோக்கத்தையறிந்து கொள்ளக்கூடாததாய் இருக்கிறது. மெய்யுணர்ச்சியோடு மட்டும் நின்றுவிடும் விலங்கினமும் தன் நோக்கத்தையறியக்கூடிய பகுத்தறிவைப் பெற்றிருக்காதிருந்தும், தான் விலங்காய்ச் சீவிக்கும் ஒரே காரணத்தால் இறைவனின் நோக்கத்தைப் பூர்த்தி செய்கிறது. ஆனல் ஆறறிவுபடைத்த மனிதன், நன்மைஎது தீமைஎது என அறியும் ஆற்றல்பெற்ற மனிதன் மட்டும் தன் கடமையில் நின்று விலகும் தவறை மேலும் மேலும் செய்கிருன். தான் செல்லும் பாதை தவருனது; அதன் வழியாற் செல்லும் போது அழிவு என்னும் படுகுழியில் அவன் விழுவான் என்பதைத் திண்ணமாய்த் தெரிந்தும் தவறிக்கொண்டே செல்கிருன்.

அவனது இச்செயலுக்குக் காரணம் எது? அழியும் பொருள்மேல் ஆசைவைத்துத் தனக்கு அழியாத ஆன்மா ஒன்று இருக்கின்றது என்பதை அவன் மறந்து விடுவதே. இதே காரணத்தால்தான் இன்றைய உலகம் லௌகீக வளர்ச்சியில் உயர்ந்தும், ஆன்மீகவளர்ச்சியிற் குன்றியும் காணப்படுகிறது. எதை உண்போம், எதை உடுப்போம் என்ற பிரச்சினையில் மனதைச் செலவிட்டு எமது ஆன்மீக வாழ்விற்கு நாம் சேகரித்துக்கொள்ள வேண்டிய உறுதுணைகளை உதறியெறியத் தலைப்பட்டு விட்டோம் நாம். மண்ணுக்கும், பொன்னுக்கும் அலைந்து திரியும் மனுக்குலம், தன் ஆன்மா வாழவிருக்கும் விண்ணுலகில் அதற்கென்றோர் இல்லத்தை ஆயத்தம் செய்ய மறந்து விடுகின்றது.

இதன்முடிவு! இறைவன் இல்லையென்ற மறுப்பு. நாஸ்திகத்தின் வளர்ச்சி. இதற்கெல்லாம் ஆதிகாரணம் மனிதன் மனிதனுக வாழாததே. 'மனிதன் எல்லாந் தெரிந்துகொண்டான், வாழும்வகை புரிந்துகொண்டான்—ஆனல் மனிதனுகவாழமட்டும் மனிதனுக்குத் தெரியவில்லை' என்று இன்றையப் பெருந்தமிழ்ப் புலவர் பாடுகின்ருர். இக்கூற்றின் உண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வெள்ளிடைமலைபோல் நாளுக்குநாள் புலப்பட்டுக்கொண்டேயிருக்கிறது. ஆம்! மனிதன் மனிதனுகவாழ ஆசைப்படாமல் கல்லாகவும், மரமாகவும், விலங்காகவும் வாழவிரும்புவது மடமையிலும் மடமை.

மனிதனுக வாழ்வது ஒவ்வொருமனிதனதும் மாபெரும் கடமையாகவிருந்தால் "உலகின் உப்பாகவும், ஒளியாகவும்" திகழவேண்டிய ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையும் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் வெறுங்கிறிஸ்தவனுகமட்டுமில்லாமல், பெயரளவில் மட்டும் கிறிஸ்தவனுக வாழாமல் ஒரு 'கிறிஸ்தவ மனிதனுக' வாழக்கடமைப்பட்டிருக்கிருன். உண்மை ஒளிவீசும் குன்றின்மேலிட்ட தீபம்போல், மனுக்குலம் கெடாமல் காக்கும் உப்பாகவும் வாழ்ந்து அவன்மனித தர்மத்தையும், தெய்வநீதியையும் நிலைநாட்டவேண்டும். 'நான் கிறிஸ்தவன்' என்று மார்தட்டுவதிலும் நான் உண்மைக் கடவுளை வழிபடுகிறேன்; ஆகவே, என் இரட்சணியம் உறுதி என்பதோடு திருப்திப்படுபவன் கடைசிநாளில் தன் பிழையை உணர்வான். ஏனெனில் தன் கடமையைப் பாதியில் முடித்துவிட்டதை அப்போதுதான் அவன் அறிவான்.

"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக! மனுவைப் படைத்தான் தனக்காக!" என்பதில் அடங்கியுள்ள ஆழ்ந்த உண்மையை அலசிப் பார்த்தால் ஒவ்வொரு கிறிஸ்தவனின்–'கிறிஸ்தவ மனிதனின்' கடமைபுலப்படும். தனக்காகத் தன் மீட்புக்காகமட்டும் வாழாது கடவுளுக்காக, மனுக்குலத்தையிரட்சிக்கும் நோக்கங்கொண்ட அவருக்காக இவன் சீவித்தல்வேண்டும். ஆகவே, அவ்விறைவனின் நோக்கத்தில் இவனுக்கும் பங்குண்டு. இந்தப் பங்கின் காரணமாக அவன் பிறரையும் அந்தப் பிறன் யாராயிருப்பினும், அவனது வைரியாயிருப்பினும் நேசிக்கக் கடமைப் பட்டிருக்கிருன். வெறும் கடமைக்கானசிநேகமல்ல இந்தஅன்பு. தன்னை எவ்வளவாக நேசிக்கிருனே, தன்னலனுக்காக என்ன பாடுபடுகிருனே அதேயளவு அவன் பிறனைநேசிக்க வேண்டும், அந்த அயலானின் நலனுக்காக நிச்சயமாக அவனது அழியாத ஆன்மாவின் நலனுக்காகப் பாடுபடவேண்டும். ஆகவேதான் அன்பு மதமாகிய கிறிஸ்தவமதத்தின் கொள்கை முதலாவது: கடவுளை சிநேகித்தலிலும், இரண்டாவது: தன்னைப்போல் பிறனை நேசிப்பதிலும் தங்கியுள்ளது. கடவுளைமட்டும் நான் நேசிக்கிறேன். என் பிறனை நான் நேசிப்பதில்லையென்று கூறுபவன் அர்ச். சின்னப்பர் கூறுவதன்படி ஒரு பொய்யன் ஆகின்ருன். கடவுள் எல்லாச் சிருஷ்டிகளிலும் தன் அன்பைப் பொழிகின்ருர். ஆகவே, கடவுளை நேசிக்கும் எவனும் அவரது படைப்பாகிய தன் அயலானையும் நேசிக்கக் கடமைப்பட்டிருக்கிருன். அயலானை நேசிக்காமல் அவனல் கடவுளை நேசிப்பதென்பது முடியாது.

இந்த நோக்கத்திற்காக வாழாதவன் தான் கிறிஸ்தவன் என்ற கடமையில் இருந்து தவறுகிருன். அதுமட்டுமல்ல தான் மனிதன் என்ற கடமையிலும் நின்று தவறி விடுகிருன். ஏனெனில், மனித தர்மத்தின் அடிப்படைக் கொள்கை பிறர் சிநேகமே. எல்லா மதங்களும் ஏதோ ஒருவிதத்தில் பிறர் சிநேகத்தைப் போதிப்பினும் கிறிஸ்தவ மதத்தில் அது பெற்றிருக்கும் இடம் வேறெங்கும் அதற்குக் கிடைக்கவில்லை. ஆனல், மற்றையோர் அதைக் கடைப்பிடிக்கும் அளவுக்குக் கிறிஸ்தவர்களாகிய நாம் அதை மேற்கொள்வதில்லையென்பது வருத்தப்படவேண்டிய விஷயமட்டுமல்ல, வெட்கப்படவேண்டிய விஷயமாகும். ஆண்டவர்கூறிய 'நல்ல சமாரித்தன்' உவமையில் வரும் ஆசாரியனைப்போலவும், லேவித்தன்–(ஆலய சடங்குகளில் உதவியாயிருப்பவன்) போலவும்தான் நம்மில் பல கிறிஸ்தவர்கள் இருக்கிருர்கள்.

வார்த்தைகளினல் மட்டும் உலகத்திற்கு முன்மாதிரிகையாயிருக்கலாம் என்ற குருட்டுக்கொள்கை பயன்படாது. ஒருவனின் நடத்தைதான் அவன் உலகத்திற்குச் செய்யும் பிரசங்கம். தன் நடத்தையால்தான் ஒருவன்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சோதரிகளே! வணக்கம்பல!

மரியன்னை ஆத்தும சரீரத்துடன் ஒட்டோலகமாய்ப் பரகதிக்கு ஆரோபணமான மகோன்னததிருநாள் இதோ! ஆவணிமீ 15-ந்தேதி வந்துவிட்டது. இத்திருநாளை மடுப்பதியில் கொண்டாட விழைபவர்கள் அத்திருப்பதிசெல்ல ஆயத்தமாகின்றார்கள். தேவதாயின் புகழ்பாடும் வானுலக சேனையுடன் நாமும் சேரவேண்டாமா? முதலில் பாவசங்கீர்த்தனத்தில் நமது பாவங்களைக்கழுவி இருதயங்களைத் தூய்மையாக்குவோம். பின்னர் புண்ணியமலர்களால் நம் இதயங்களை அலங்கரிப்போம். திருநாளில் திவ்வியபலியில் பங்குபற்றி, திருவிருந்தருந்துவோம். அப்போது ஆரோபணமாகும் அன்னைக்கு நாமும் புகழ்பாடி வாழ்த்துக்கூறத் தக்கவர்களாவோம்.

சோதரி ரோஜா.

## கேட்டால் கிடைக்குமா?......

எல்லாம் வல்ல இறைவனை நோக்கி
எழுந்த மன்றாட்டு எதுவென்றாலும்
வல்லவர் வதியும் விண்ணக வாசலை
வந்தடையாது போவதில்லை
நல்லதென்றாலும் நம் வேண்டுதல்கள்
நாளது வரையில் கிடைப்பதேயில்லை
இல்லையென்று இறைவன் மறுப்பதேனோ
தொல்லை தரும் அது என்பதனாலே!

செல்வம் வேண்டுமென் றிரந்து கேட்கின்றோம்
சீர்பெறு வாழ்வே சிறந்ததென்கின்றார்
உல்லாச வாழ்வை விரும்பி நிற்கின்றோம்
கஷ்ட, நோக்காடு காத்திருக்கின்றது
புகழும், உயர்வும் வேண்டி நிற்கின்றோம்
இகழ்வும், தாழ்வும் நம் பங்காயது
இல்லையென்று இறைவன் மறுப்பதேனோ!
இவ்வழி சிறந்தது என்பதனாலே!

மன்றாட்டெல்லாம் மண்ணாயிற்றென்றே
மனமிகக் கலங்கி மறுகுவதேனோ
அன்றன்றுள்ள அப்பத்திற்காய்
அங்கலாய்த்தே அல்லலுறுவதேனோ
அன்றாட தேவை அவசியம் தருவார்
அடிக்கடி அலட்சியம் செய்தும் பார்ப்பார்
இல்லையென்று இறைவன் மறுப்பதேனோ
இன்னமும் இடைவிடாது இறைஞ்சுகஎன்றே.

# விளக்கைக் குடத்துள் வைத்தால்

சாந்தா தன் பெட்டி படுக்கைகளை அவிழ்த்துத் தனது பொருட்களை அவை வைக்கப்படவேண்டிய இடத்தில் வைத்துக்கொண்டிருந்தாள். கடைசியாக மரியன்னை பரலோகத்துக்கு ஆரோபணமான மேரையாய் காட்சியளிக்கும் அழகியபடமொன்று வந்தது. அதை மாட்டுவதற்குத் தகுந்த இடத்தைக் கண்டுபிடித்தாள். அதில் அதைவைக்கப்போகும்போது தான் அவளுக்கு அந்தஎண்ணம் உதித்தது. "இவ்வீட்டவர்கள் பிறசமயத்தவர்களாயிற்றே. அப்படியானால் இப்படத்தைக்கண்டால் அவர்கள் என்ன நினைப்பார்கள். அதுவும் தங்கள் குழந்தைகளுக்கு ஆயாவாக என்னைத் தெரிந்திருக்கிறார்களே. சிலவேளை இவர்கள் என்னை வேலையிலிருந்து நீக்கிவிடவும் கூடுமே" என்று யோசித்தாள். மறுகணம் அப்படமானது பெட்டியினுள் சரணடைந்தது.

ஆம்! அந்தவீட்டவர்கள் கத்தோலிக்கர்களல்ல அவர்கள் செல்வச்சீமான்கள். தமது இரு மழலைச்செல்வங்களான ரவி, கமலிஎன்ற இருவரையும் பராமரிப்பதற்காகவே சாந்தாவை வேலைக்கு அமர்த்தினார்கள், மாதம் 150ரூபா சம்பளம். அந்த வேலையை விட்டுவிடச் சாந்தாவுக்கு மனம்வருமா, என்ன?

சிலகிழமைகள் கழிந்தன. சாந்தா எல்லா வேலைகளையும் சரிவர நிறைவேற்றப் பழகிக்கொண்டாள். வீட்டு எஜமான்களுடனும், அயலவருடனும் சுமுகமாக நடந்துகொண்டாள். ரவியும், கமலியும் அவளின்மேல் அதிக அன்பு கொண்டார்கள். சாந்தா அக்கா! சாந்தா அக்காஎன்று அவளையே சுற்றிச்சுற்றி வந்தார்கள், எல்லாம் நல்லபடியாக நடந்துகொண்டே வந்தது. ஆனால், ஒன்றுதான் எங்கோ பிழைபோய்விட்டது. ஆம்! அவளது கத்தோலிக்க விசுவாசம் தான் குடத்துள் வைக்கப்பட்ட விளக்காயிற்று. முதலில் இரவுவேளைகளில் படுக்கப்போகுமுன் சாந்தா தன் அறையில் முழந்தாட்படியிடுவாள். அவளது சிறுபெட்டியிலிருந்து செபமாலை அப்போது வெளியே வரும். பயபக்தியாக ஓதிவிட்டு, இராச்செபத்தையும் முடித்துவிட்டுப் படுப்பாள். காலையில்எழுந்ததும் திரும்பவும் முழந்தாட்படியிட்டுக் காலைச்செபத்தை ஓதுவாள். ஆனால், சிலகிழமைகள் ஓடியபின் செபமேதுவுமேயின்றி ஆடுமாடுபோன்ற வேத அறிவில்லாத பிராணிகளுக்கொப்ப அவளும் சீவிக்கத் தொடங்கி விட்டாள்.

ஒருநாள் ஞாயிறு சாயந்தரம். ரவியையும், கமலியையும் அழைத்துக்கொண்டு உலாவச்சென்றாள். போகும்வழியில் மரியன்னையின் சிற்றாலயம் ஒன்றிருந்தது. மாலைஆராதனை நடந்துகொண்டிருந்ததால் இனிய கீதங்களின் ஓசை வெளியே தென்றல் காற்றில் மிதந்து வந்துகொண்டிருந்தது. "சாந்தாஅக்கா! எங்களையும் அந்த மண்டபத்துக்குள்ளே அழைத்துப் போங்களேன். முன்னே எங்களை லில்லிஅக்கா அங்கே அழைத்துப்போவாள்" என்று ஆர்வத்துடன் கேட்டாள் ரவி. "லில்லிஅக்கா அங்கேயுள்ள சுரூபங்களைப்பற்றி, சிலுவையில் அறையுண்ட கடவுளைப் பற்றி எத்தனையோ கதைகள் சொல்வாளே. உங்களுக்குத் தெரியாதா?" என்றாள் கமலி. துணுக்குற்றாள் சாந்தா. "முன்னே இவர்களுக்கு ஆயாவாக இருந்தலில்லி கத்தோலிக்க கோவிலுக்குள் இந்த அஞ்ஞானச் சிறுவர்களைக் கூட்டிக்கொண்டு போனாளாமே. இதற்காகத்தான் வேலையிலிருந்து நீக்கப்பட்டாளோ? என்னமோ" என்று யோசித்தாள். ஒருவாறு கதையைமாற்றி வஞ்சகம் அறியாத அச்சிறுவரை வீட்டுக்குத் திரும்பக் கூட்டிவந்தாள். ஆனால், வழிநீளம் வளவளஎன்று வாயலுக்காது மழலைபேசும் அச்சிறுவர் அதிருப்தியுடன் மௌனம்சாதித்தது அவள்மனதை என்னவோ செய்தது. ஆனால், அன்றுதான் சுளையாக ரூபா 150சம்பளம் முதல்முறையாகப் பெற்றிருந்தாள். இந்தஊதியத்தைத் தரும்வேலையை அவள் கெதியில் இழந்துவிடமுடியுமா? ஆகவே அன்றிலிருந்து கத்தோலிக்க ஆலயங்கள் இருக்கும் தெருக்களின்வழியாக அப்பிள்ளைகளை அவள் அழைத்துச்செல்வதேயில்லை.

நாட்கள் ஓடின. ஒருநாள், குழந்தைகள் பகற்போசனத்தின் பின் சயனித்துவிட்டார்கள். எசமானியிடம் ஏதோ அலுவலாக வந்த சாந்தா, தனது எஜமானும் எஜமானியும் சம்பாஷித்துக் கொண்டிருப்பதைக் கண்டு கதவருகே சற்றுத் தயங்கி நின்றாள். அவ்விதம் அவள் நின்றதை அவர்கள் கவனிக்கவேயில்லை. அவர்கள் தம்பாட்டுக்குப் பேசிக்கொண்டிருந்தனர். பேசிக்கொண்டிருந்தது திருமதி வாசன் தான். "சாந்தா மிகவும் நல்லவளாயிருக்கிறாள். மிகவும் திறமையுள்ளவள். ஆனால் ஒன்று, இவள் நம்முடன் வந்து ஐந்து வாரங்களாகிறதே. ஒருநாள் என்றாலும் காலையிலெழுந்து கோயிலுக்குப் போனதே கிடையாதே. மற்றநாட்களில்தான் போகட்டும் என்றாலும் ஞாயிற்றுக்கிழமைகூட அவள்போவதாகத் தெரியவில்லையே. முன்னேயிருந்த லில்லி ஒவ்வொருநாளும் காலையில் பூசைக்குப்போய் விடுவாளே, திரு. வாசன் சர்வ சாதாரணமாக, "அதனாலென்ன இப்போது சிலநாட்கள்தானே வந்திருக்கிறாள், இடம் பழகவேண்டாமா?" என்றார், "அதற்கில்லை! மேலும் பாருங்கள்; சாந்தாவின் அறையிலே அவர்களது சமயத்தைச் சார்ந்த படங்களோ, சொரூபங்களோ கூடக் கிடையாது. லில்லி, ஒரு அழகான பெண்மணி கையில் ஒரு பாலனுடன் கூடிய படத்தை வைத்திருந்தாளே. இன்று முழுவதும் பார்த்துக்கொண்டிருக்கலாமே அப்படத்தை. அழகான கதைகள் பல சொல்லிக் கொடுப்பாளே நம் குழந்தைச் செல்வங்களுக்கு. கத்தோலிக்கர் கையில் அடிக்கடி வைத்து உருட்டும் அந்த மணிமாலை கூட இப்பெண்ணிடம் இல்லையே." என்றாள் திருமதி வாசன். ஆனால் நமக்கென்ன! நமது பிள்ளைகள் மிகவும் அன்பாக, நன்றாக வளர்க்கப் படுகிறார்களே; அது போதாதா" என்றார் திரு. வாசன் அவர்கள். "ஏதோ இந்தப்பெண் கத்தோலிக்க சமயத்தவள் என்று சொன்னீர்கள். லில்லியுடைய சமயத்தைச் சேர்ந்தவளாதலால் அவளைப் போலவேயிருப்பாள் என்று நினைத்தேன், எனக்கென்னவோ லில்லி, ஏன் ஒரு கன்னியாஸ்திரியாகப் போவதற்காக நம்மைவிட்டுச் சென்றாள் என்றுதான் அங்கலாய்க்கிறது மனம் என்று சொல்லி முடித்தாள் திருமதிவாசன்.

இந்தஉரையாடலை உற்றுக்கேட்ட சாந்தா நழுவினாள் அங்கிருந்து. தனது அறையைநாடினாள். "தொப்" என்று படுக்கையில் வீழ்ந்து குமுறிக் குமுறி அழுதாள். "கத்தோலிக்களாகிய தான் தனது சமயத்தை அலட்சியம் செய்ததையிட்டு அஞ்ஞான மாதொருத்தி குத்திக் காட்டவேண்டி நேர்ந்ததே என மனமுடைந்தாள். யேசுவே! எனது அலட்சியத்தை மன்னியும். தேவதாயே! என்குற்றத்தை மன்னிக்கும்படி உமது திருக்குமாரனிடம் மன்றாடும்" என உருக்கமாக வேண்டினாள். எழுந்தாள், தேவதாயின் படத்தை வெளியே எடுத்து அதை சுவரில் மாட்டினாள். பூந்தோட்டத்தில் பூக்களைக் கொய்துவந்து அலங்கரித்தாள். தன் ஜெபமாலை, செபப் புஸ்தகம் இவற்றை மேசைமீது எடுத்து வைத்தாள். அன்று மாலை ரவியும் கமலியும் மரியன்னையின் ஆலயம் போய் அழகான கதைகள் கேட்கும் பாக்கியம் பெற்றனர். அடுத்தநாட்காலை நேரத்தோடு எழுந்து கோவிலை நாடிச்செல்லும் சாந்தாவைக்கண்டு மூக்கின் மேல் விரலை வைத்தாள் திருமதி வாசன்.

வருடங்கள் பல கழிந்தன. மரியன்னையின் சிற்றாலயத்தில் ஜனக்கூட்டம் திரண்டிருக்கிறது. பாலன் ரவி, பரிசுத்த குரு அன்ரனியாக தமது முதற்பூசைப்பலியை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்துக் கொண்டிருக்கிறார். அதை அகமகிழ்ச்சியுடன் கண்ணீர்வடிய நோக்குகிறாள். சாந்தா. அவள் பக்கத்தில் யார்? திரு. திருமதி வாசனும் கமலியும் மனந்திரும்பிய புதுக்கத்தோலிக்கர்களாக மகிழ்ச்சி ததும்ப இவ்வினிய காட்சியை ரசிக்கின்றனர்,

ஆம். நமது சத்தியவேத விசுவாசத்தை நாம் மறைத்து வைப்பதால் பலனுண்டா? நமக்கும் பிறருக்கும் அடையவேண்டிய ஏராளமான நன்மைகளை இழந்துவிடுவோம். விளக்கைக் குடத்துள் வைத்தால் வெளிச்சம் தோன்றுமா?

---

● உலகப்பிரசித்திபெற்ற சித்திரவிற்பன்னரும், சிற்பாசாரியுமான மைக்கேல் ஆஞ்ஜெலோ மரணமடைந்த நான்காம்நூற்றாண்டின் ஞாபகார்த்தமாக வத்திக்கான்இராச்சிய தபாற்கந்தோர் ஒருதொகைஇனமான தபால் முத்திரைகளைப் பாவனைக்கு வெளியிட்டிருக்கின்றது.

● பம்பாய்நகர் சர்வதேச சற்பிரசாதமகாநாட்டுக்கென நிதிகள்சேகரிக்கும்நோக்கமாக நடத்தப்படும் களியாட்டுகள் ஆதியவற்றிற்கு வரிஅறவிடுவதைப் பம்பாயைத் தலைநகராகக் கொண்ட மகாராஷ்திரஇராச்சியம் விலக்கிவிட்டிருக்கின்றது.

● சின்னப்பபாப்பரசரின் ஞானஸ்நானப்பெயர் ஜியோவான்னி பப்திஸ்தாஎன்பது. அதனால், அன்று அவர்பெயர்கொண்ட அர்ச். ஸ்நாபக யுவானியாரின் திருநாளுக்குமுதனாள் 26கருதினால்மார் அவரைச்சந்தித்துச் சோபனவாழ்த்துக் கூறியபோது, "உலகம் சமாதானத்தை அத்தியாவசியகம் வேண்டிநிற்கின்றது" என்று அவர் கூறலாயினர்.

● அமெரிக்ககர்தினால் பிரான்சிஸ் ஸ்பெல்மன் ஆண்டகை தம்முடைய 75-வதுபிறந்தபெருநாளையும், தாம் நியூயோர்க்நகர் அதிமேற்றிராணியாராக வந்த 25-ம்ஆண்டுநிறைவுவிழாவையும் அண்மையிலே கொண்டாடியபோது, அவரைக்கௌரவிக்குமுகமாக நடைபெற்றவிருந்திலே சுமார்நாலாயிரம் பிரமுகர்கள்கலந்துகொண்டார்கள். இந்தஇருவைபவங்களையும் முன்னிட்டு அவர் சின்னப்பபாப்பரசருக்கு 75,000 டலர் நன்கொடை வழங்கியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் திருச்சபை

"மற்றவர்களிடத்திலிருந்து ஒளிப்பதற்கு நம்மிடத்தில் ஒன்றுமில்லை" யென்றும் "சிந்தனையிலும், வாக்கிலும், செயலிலும் துணிவுள்ளவர்களாக நாம் இருக்கவேண்டும்" என்றும் புரட்சிகரமாகப் பேசிய பரிசுத்த தந்தையின் சொற்கள், சங்கத்தில் கூடியிருந்த பிதாக்களின் உள்ளங்களில் ஆழமாய்ப் பதிந்தன. நமது மதத்தின் அன்புச் செய்தியை உலகிற்கு எடுத்துக்காட்ட வேண்டும் என்ற ஒரே நோக்குடன் சாந்தமானதோர் புரட்சியில், உண்மை பெறும் ஒரு தர்க்கத்தில் ஈடுபட்ட பிதாக்களின் குறிக்கோள்களெல்லாம் ஏமாற்றமடைந்த நரியின் புளித்த திராட்சப் பழங்கள்போலப் பத்திரிகை நிருபர்கள் பலரின் பேனா முனைகளிலே உருட்டிப் பிரட்டப்பட்டன. இந்தப் பிரட்டலின் மத்தியிலே உண்மை திருகப்பட்டது. விளைவு என்ன? சங்கத்தின் அவசியமில்லாதவைகள் முக்கிய சம்பவங்களாகப் புதினத் தாள்களிலே தலையங்கம் பெற்றதாலே இச் சரித்திரம் எழுதும் சங்கத்தின் இணையற்ற சாதனை மறைந்த மாணிக்கம் போல் ஒதுங்கிக்கிடந்தது. இத்தகைய செயலிலே வத்திக்கான் வந்திருந்த புதின அறிக்கையாளர்கள் ஈடுபட்டிருக்கும் வேளையிலே, இதேபோன்ற ஒரு மனப்பான்மையைத் திருச்சபையிலும் அறுத்தெறிந்து முக்கியமற்றவைகளிலே வீண்கவனம் செலுத்துவதை விட்டு, இன்றைய உலகிற்குத் தேவையானவைகளை அதிசீக்கிரத்தில் செய்து முடிக்க வழிகோலிக் கொண்டிருந்தனர் புனித சங்கத்தின் பிதாக்கள்.

பாவ மனிதனுக்குப் பரலோகத்தை அளிக்கவென்று யேசுவந்தார். இரட்சணியத்தின் நற்செய்தியை எடுத்துரைத்துத் தமது மரணத்தினாலேயே அதற்குச் சாட்சிகூறினார். அந்த நற்செய்தி விடாது உலகத்தின் எக்கரைக்கும் பரவவேண்டும், இவ்வுலகத்திலே பிறக்கும் ஒவ்வொரு மனிதனின் உள்ளத்தின் கதவுகளிலேயும் சென்று தட்டவேண்டுமென்று ஆசித்த கிறிஸ்து திருச்சபையை உண்டாக்கினார். எல்லாம் முடிந்ததும் இந்த உலகத்திலிருந்து விடைபெற்றுக்கொள்ளுமுன் அப்போஸ்தலருக்குப் பெரியதோர் அலுவலையும்விட்டுச் சென்றார். "உங்கள்மேல் எழுந்தருளி வரப்போகிற இஸ்பிரீத்துசாந்துவின் வல்லமையை நீங்கள் அடைந்து ஜெருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசிமட்டும் எனக்குச் சாட்சிகளாகவிருப்பீர்கள் என்றார்." (அப். நடபடிக்கை 1 : 8)

ஆம். இதே கட்டளை தான் இவர்கள் எல்லாருடைய உள்ளங்களிலும், சிந்தனைகளிலும் இடம்பெற்றது. யூதேயாவில்மட்டுமல்ல, சமாரியாவில்மட்டுமல்ல, பூமியின் கடைசிமட்டும், சரித்திரத்தின் முடிவுமட்டும் கிறிஸ்துவிற்குச் சாட்சி கூறவேண்டுமானால் அவர் உண்டாக்கிவைத்த திருச்சபையின் அலுவலென்ன? அதே அலுவலைச் செய்துமுடிப்பதற்குத் திருச்சபை எவ்வாறு அமையவேண்டும்? இத்திருச்சபையைப்பற்றி மக்கள் மனதிலே குடிகொண்டிருக்கும் அடிப்படையில்லாத எண்ணம் எவ்வாறு மாறுபடவேண்டும் என்றெல்லாம் சிந்திக்கத் தொடங்கினார்கள் சங்கத்தின் பிதாக்கள்.

மனவருத்தத்திற்குரிய விதமாக இன்றுவரை "திருச்சபை" என்ற சொல் எம்மைப் பரிபாலித்துவரும் ஞானத்தலைவர்களுடன் மட்டுமே பிணைக்கப்பட்டு வந்திருக்கிறது. 'திருச்சபை' என்று கூறியதும் உரோமை நகரமும், கம்பீரமான சம்பேதுரு வானவர் ஆலயமும் வத்திக்கான் மாளிகையும், நமது மனதிலே பறந்து வருகின்றன. தவிர்க்கமுடியாத சரித்திர சம்பந்தமான விடயங்களாலே ஏற்பட்டுவிட்டதாக்கும் இவ்வித எண்ணங்கள். ஆனால், சந்தர்ப்பத்தின் விதியால் ஏற்பட்ட எண்ணங்கள், நம்பிக்கைகள் "உண்மை" என்ற வெளிச்சத்தை மூடிவைக்கும் கருவிகளாக அமையுமாயின், அத்தகைய மூட நம்பிக்கைகளுக்கு நாம் அடிமைகளாகவிருப்பது தப்பிலும் தப்பு.

அப்போஸ்தலர் காலத்திலே இருந்த ஆதிக்கிறிஸ்தவர்கள் எப்படி வாழ்ந்தார்கள்? கிறிஸ்துவின் இரட்சணியத்திலே நம்பிக்கைவைத்து அவரை உண்மையான தேவன் என்று ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் ஒருங்கே கூட்டமாக வாழ்ந்தார்கள். தமக்குக் கிடைத்த இந்த அரிய பாக்கியத்தை எண்ணிய போதெல்லாம் அவர்களுடைய உள்ளங்கள் சந்தோஷத்தினால் மலர்ந்தன. இந்த மலர்ச்சியினால் தாம் எல்லோரும் கிறிஸ்துவின் கீழ்ச்சகோதரர்கள் என்று எண்ணினார்கள். தம்மிடம் உள்ள செல்வத்தைச் சரிசமனாகப் பகிர்ந்து எல்லோருடைய தேவையையும் பூர்த்திசெய்து வனப்புற வாழ்ந்து வந்தார்கள். அன்பு இவர்களை ஆட்சி புரிந்தது. சேவை என்னும் தன்னலமற்ற மனப்பான்மையினால் தூண்டப்பட்டு, அயலவனைச் சகோதரனாகக் கணித்துவந்த இவர்கள் நாளுக்குநாள் பலி செலுத்தவும் தேவனுக்கு ஆராதனை செலுத்தவும் கூட்டம் கூட்டமாகக் கூடினார்கள். சுருங்கக்கூறின் விசுவாசம், அன்பு, சேவை என்ற மூன்று பெரும் இலட்சியங்கள் இவர்களைக் **"கடவுளின் சமுதாயமாக"** ஒன்றித்து வைத்தன. திருச்சபை என்ற சொல் இவர்களுக்குப் பாரிய கட்டிடங்களையும் உரோமை நகரையும் ஞானத்தலைவர்களையும் குறித்ததா? இல்லை, இல்லை. தாம் ஒவ்வொருவருமே ஞானச் சரீரமாகிய கிறிஸ்துவின் திருச்சபையின் அங்கமெனக் கருதினார்கள். ஒரு சரீரத்தின் அங்கமானது சரீரத்துடன் இணைந்து எப்படி அதற்கு உதவிபுரிகின்றதோ, அதேபோல் நமது ஆதிக் கிறிஸ்தவர்களும் தாம் எல்லோரும் **"தேவனின் சமுதாயம்", "ஆண்டவனின் அடியார்கள்"** என்ற எண்ணத்தினாலே தூண்டப்பட்டுத் தமது தூய வாழ்க்கையினாலே "மாவிற் புளிக்காரம்" போல் திகழ்ந்தார்கள்.

கிறிஸ்துவில் விசுவாசமுள்ள தோழர்களே! இதே மனப்பான்மை தான் இன்று நம்மை ஆட்கொள்ளவேண்டும். சிந்தனையற்ற விதமாகத் தெரியாத் திசை யொன்றை நோக்கி உருண்டோடும்உலகிற்கு நமது மதத்தின் அன்புச் செய்தியை எடுத்துரைக்கவேண்டுமானால், கிறிஸ்துவின் பெயரிலே பெருமை தட்டும் நம் ஒவ்வொருவருடைய தோளின்மீதும் பெரியதோர்பொறுப்பு வைக்கப்பட்டிருக்கின்றது. கிறிஸ்தவனாகப் பிறந்த எவனும் இவ்விலட்சியக் குறிக்கோளை மறந்து கிறிஸ்தவனாக வாழ முடியாது. வாழ்ந்தால் அது அர்த்தமற்றதாகவே முடியும். பூமியின் கடைசி எல்லைமட்டும் கிறிஸ்துவிற்குச் சாட்சி கூறவேண்டுமானால் நாமும் வாழும் இத்திருச்சபையிலே ஒரு பொறுப்புள்ள, அத்தியாவசியமான அங்கத்தவர் என்பதை நன்கு உணரவேண்டும். அழியாத்திருச்சபையின் அழகிய சரித்திரமொன்றைச் சிருட்டிக்கும் சிறந்த வேலையிலே எம்மொவ்வருவருக்கும் ஒரு பாரமான பொறுப்பு உண்டு என்ற எண்ணமும் நம்மையும் நாம்வாழும் சமுதாயத்தையும் மென்மேலும் கிறிஸ்துமயமாக்கும் இலட்சிய அவாவும், நமது கிறிஸ்தவ வாழ்க்கையின் மையத்தை அடையவேண்டும். நாமெல்லாம் திருச்சபை. அதற்குத்தானே ஞானத்தலைவர்கள் இருக்கிறார்களே, என்னைமட்டும் கவனித்தால் போதும் என்ற அவலட்சண நம்பிக்கைக்கு அர்த்தமே கிடையாது.

இருட்டைப்பழிப்பதைவிட ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றிவைப்பது நல்லமல்லவா? கிறிஸ்தவனாகப்பிறந்த எமதுகையிலே மெழுகுவர்த்திபோன்ற ஒரு குருட்டு வெளிச்சமல்ல; ஆனால் ஒரு பெரிய மின்சார விளக்கு இருக்கிறது. இந்த மின்சார விளக்கு துலக்கமாகப் பிரகாசிக்க வேண்டுமானால், ஆதிக்கிறிஸ்தவர்களை அன்று குடிகொண்ட விசுவாசமும் விசுவாசத்தினால் ஏற்பட்ட அன்பும், அன்பினால் ஏற்பட்ட தன்னலமற்ற சேவையும் எம் உள்ளங்களில் இயந்திரத்திலிருந்து மின்சாரமாக ஓடவேண்டும். இந்த மின்சார இயந்திரத்தை இலகுவாக இயக்குவதற்கு இவ்வியந்திரத்திலே காலாகாலமாகப் படிந்து, இயந்திரத்தின் ஒரு பாகமாகவே மாறிவிட்ட துருப்பு மனப்பான்மைகளைத் துணிவுடன் சுரண்டி எறிந்துவிடவேண்டும். கிறிஸ்துவின் இரட்சணிய இரத்தம் பாய்ந்து ஓடுகின்ற வாழும் இத்திருச்சபை ஞானமேய்ப்போரால் மட்டுமல்ல எம்மொவ்வொருவராலேயுமே சிருட்டிக்கப்பட்டது, ஞானமேய்ப்போரின் அன்புக் கட்டளையின்மீது பணிந்து நடந்து, திருச்சபை எதேச்சாதிகாரமாக எம்மை ஆளும் ஓர் அந்தரங்கக் குழுவல்ல, சேவையை இலட்சியமாகக்கொண்ட தேவனின் மக்களின் கூட்டம் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டவேண்டும்.

இத்தகைய ஒரு சமுதாயத்திலே நாம் சுதந்திரமில்லாது வாழவேண்டுமே என்று பலர் எண்ணிக்கொள்ளலாம். நமது உள்ளங்களிலே படிந்து கிடக்கும் துருப்புகளில் இதுவும்ஒன்று தான். சுதந்திரமாகக் கடவுளின் அன்பை எடுத்துக்காட்டும் உபகரணமாக ஒருவன் அமைந்துவிட்டால் அவன் சுதந்திரத்தை இழந்துவிடமுடியுமா? ஆனால், இங்கு நம்மையே நாம் ஒரு கேள்வி கேட்டுக்கொள்ளவேண்டும். சுதந்திரம் என்றால் என்ன? கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற குறிக்கோளுடன் திரிபவர்களின் மத்தியிலே "சுதந்திரம்" தனது சுதந்திரத்தை இழந்து தவிக்கின்றது. நினைத்தபடி நடப்பதல்லச் சுதந்திரம். "செய்ய வேண்டியதைச் செய்வதுதான் சுதந்திரம்." "படைத்தவனை ஏற்றுக் கொண்டு மற்றவனுக்காக வாழ்வது தான் உண்மைச் சுதந்திரம்" என்கிறார் பிரபல வேதசாஸ்திரி கொங்கார். எனவே கிறிஸ்தவனும் தனது உண்மைச் சுதந்திரத்தை அடைந்துகொள்ளவேண்டுமானால், கிறிஸ்துவைத் தனது உள்ளத்திலே விசுவாசத்தின் மூலம் ஏற்றுக்கொண்டு பிறனுக்காக வாழவேண்டும்.

"கனவினிலே வாழ்க்கைதான்
இன்பம் எனக்கண்டேன் ;

எழும்பியதும் சேவைதான்
வாழ்க்கையெனக் கண்டேன் ;

சேவைசெய்து சேவைதான்
இன்பமெனக் கண்டேன்."

என்று அழகாகக் கூறியிருக்கிறார் அறிஞர் இரவிந்திரநாத் தாகூர்.

கிறிஸ்தவ சமுதாயத்தைத் தட்டியெழுப்பிப் புதிய இவ்வுலகத்திலே புத்துணர்ச்சியுடன் செயலாற்றவைக்கும்படி இப்படியான பலசிந்தனைகளைத் தம்மத்தியிலே கலந்துகொண்டார்கள் இப்பரிசுத்த சங்கத்தின் பிதாக்கள், இன்னும் இத்தகைய சாதனையை ஈட்டிவைக்கும் வழியிலே ஏற்படும் தடைகளையெல்லாம் விலக்கிவைக்க ஞானமேய்ப்போர்கள் உறுதிகொண்டார்கள். இருவழிபாட்டு முறைகளை மக்களுக்கு அர்த்தமுள்ளவைகளாகச் செய்வதற்குச் சுயபாஷையிலே பலஞானச் சடங்குகளை நிறைவேற்றலாம் என்றும் பலி ஒப்புக்கொடுக்கும் விடயத்திலேயும் மக்களை முக்கிய பங்கெடுக்கும் விதமாகச் சிறிய சில திருத்தங்களைக் கொண்டுவரலாமென்றும் ஆலோசித்தார்கள் இவர்கள். இப்படியாகக் கிறிஸ்தவர்கள் மத்தியிலே பிறக்கக் கூடிய புதிய வாழ்க்கையிலே உதிக்கும் அன்பு மனப்பான்மையால் திருச்சபையை விட்டுப்பிரிந்துபோன மற்றும்கிறிஸ்தவமதச்சகோதரர்களை ஆட்கொள்ள முடியுமென்றும் இத்தகைய ஒற்றுமை வழியிலே கிடக்கும் பள்ளங்களும் திட்டிகளும் சமன்படுத்தப்பட வேண்டும் என்றும் திட்டமிட்ட பிதாக்களின் இக்கூட்டம், உலகிற்கு ஒருபெரிய எடுத்துக்காட்டாக அமைந்தது. உலகசமாதானத்திற்கே வழிபட்ட இப்பெரிய சாதனையின் வெற்றியை ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் புகழ்ந்தன. ஏன், "விற்றரி கசெற்," "ராஸ்" முதலிய கம்யூனிஸ்தப் பத்திரிகைகளே, இச்சங்கம் உலக சமாதானத்திற்கே அடிகோலவல்லது என எடுத்துக்காட்டின.

வாசக நேயர்களே, இவ்வத்திக்கான் பொதுச்சங்கம் இன்னும் முடிவுபெறவில்லை. நடைமுறையிலும் பெரிய புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவரவில்லை. ஆனால், காலஞ்சென்ற பரிசுத்த தந்தை அருளப்ப பாப்பரசர் கூறியதுபோல, "திருச்சபை அதிகாரம் செலுத்துவதற்கு ஏற்க அமைக்கப்பட்ட சட்டக்கோர்வையல்ல. ஆனால், இன்றும் நம்முடன்வாழ்ந்து மக்களைப் பரிசுத்தமாக்கி இரட்சித்து வாழ்வழிக்கும் வள்ளலுக்குச் சாட்சிகூறும் ஒரு மக்கள் சமுதாயம் என்பதைச் சங்கத்தின் பிதாக்கள் தமது தர்க்கங்களினாலே காட்டிவிட்டார்கள்." பொறுப்பற்றிருந்த எமக்கு ஒருபாரிய பொறுப்பையும், இலட்சியத்தையும் தந்து, அன்பின் பாதையிலே வீரமுடன் சேவைசெய்யத் தூண்டிவிட்டிருக்கிறார்கள். எனவே, இச்சங்கத்தின் இந்தப்புதிய நற்செய்தி தந்தை அருளப்பர் கூறியதுபோல், எல்லோருடைய உள்ளங்களிலேயும் சென்று தட்ட இதை வாசிக்கும் நேயர்களாகிய நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

—சங்கலன்

முடிவு.

---

திருமதி
**பேர்னதேத்தம்மா பிரான்சிஸ் அவர்கள்**
அமரத்துவமடைந்த

## மூன்றும் வருட நினைவு

பிறப்பு : 6—7—1916
இறப்பு : 12—8—1961

இவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக நிகழும் ஆவணிமாதம் 11-ந்திகதி செவ்வாய்க்கிழமை (11-8-64) காலை 6மணியளவில் பருத்தித்துறை, அர்ச். தொம்மையப்பர் ஆலயத்தில் ஒரு துக்கப்பாடற் பூசை நிறைவேறும். இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிமார், பந்துமித்திரர் அனைவரும் இவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

" நித்திய இளைப்பாற்றியை இவவுக்குக்
கொடுத்தருளும் சுவாமி!
சமாதானத்தில் இளைப்பாறுவாராக."

இவவின் பிரிவால் துயருறும்
அருமைப்பத்தா : ம. பிரான்சிஸ்சும்,
பிள்ளைகளும், சகோதர சகோதரிகளும்.

---

மௌனமே மங்கையருக்கு
மேன்மையான மணி ஆரம்.
ஆனால், அணிந்தால் அல்லவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னத தேவனின் வாசஸ்தானம்

## அன்றும் இன்றும்

— எஸ். எம். ஜே.

(முன்தொடர்ச்சி)

### பழையதும் புதியதும்

அதிபரிசுத்த ஸ்தலத்திலே சருவேசுரன் முகில் உருவில் கிருபாசனங் கொண்டிருந்தார். யேசுவின் திருஇருதயமும் பரலோக மன்னுவாகவும், சருவேசுரனுடைய கற்பனைகள் யாவும் கொண்டதாகவும், ஆனால், கற்பலகையில்எழுதப்படாத —நேசத்தினால்நிறைந்து சருவேசுரனுடைய சித்தத்துடன் ஐக்கியமானதாக விளங்குகின்றது. ஆரோனுடைய கோலானது சருவேசுரனுடைய வல்லமையை அன்று பார்வோனுக்குக் காண்பித்தது. அவனை தேவபுத்திரரை விடுதலைசெய்யும்படி தூண்டியது. யேசுவின் திருஇருதயமோவெனில் அன்பின் விசாலத்தினால் யூதமக்களுக்குப் புதுமைகளைச்செய்து தமது வல்லமையை விளங்கச்செய்து யூதகுருமாரைத் தாம் மெய்யான மெசியா என்றும் நம்பும்படி செய்யத் தூண்டியது. மோயீசனுடைய கட்டளைகள் என்று சொல்லிக்கொண்டு ஒன்றுமறியாத பாமரமக்களைஏமாற்றி, கட்டுரைத்துத் தாம்விரும்பியபடி அச்சட்டங்களுக்கு விளக்கங்கூறி முழுஅடிமைத் தனத்தில் ஆழ்த்திவந்தனர் யூதகுருக்கள். அத்தகைய அடிமைத்தனத்திலே, அறியாமையிலே இருந்து யூதமக்கள் விடுபடவேண்டும் என்று விரும்பினார் யேசு. மனித அவதாரத்தின் பரம இரகசியத்தில் அடங்கியுள்ள அளவற்ற தெய்வீக அன்பைக்காண்பித்துப் பசாசின் அடிமைத்தளையிலிருந்து மக்களை விடுவிக்கமுயன்றார்—வழிகாட்டினார்.

### இலட்சியம் ஒன்றே

வாக்குத்தத்த உடன்படிக்கையும் அது வைக்கப்பட்ட கூடாரமும் சருவேசுரனுக்கு மகத்துவமான இருப்பிடத்தை உலகில் கொடுப்பதும், அவருக்குகந்த ஆராதனையும் பலியும் மக்களினால் செலுத்தப்படவேண்டும் என்பதையே குறிக்கோளாய் — இலட்சியமாய்க் கொண்டிருந்தன. யேசுவின் திருஇருதயத்தில் அடங்கியிருக்கும் நோக்கமும் அதுவே. அதிஉன்னத தேவன் விரும்பக்கூடிய, அவருக்குவப்பானதென்று காணக்கூடிய ஆராதனைகளும், பலிகளும், செபங்களுமே திருஇருதயத்தின் வழியாகச் செலுத்தப்பட்டன ; செலுத்தப்பட்டுவருகின்றன. மேலும், சருவேசுரனுடைய சித்தத்துக்கு முழுதும் பணிந்த மனதுடன் என்றென்றும் செலுத்தப்படும்உயர்ந்த பலியன்றோ சருவேசுரனுக்கு யேசுவின் திருஇருதயத்தின் மூலமாகச் செலுத்தப்பட்டுவருகின்றது. யேசுவின் திருஇருதயத்தின் வழியாகத் தமது ஏககுமாரனுடைய நைவேத்தியப்பலியை—மனுக்குலத்தின் பாவப்பரிகாரமாகவும் தேவதூதர்களுக்கு வரப்பிரசாதம் அடைவதற்கும் அவர்செய்த உயர்ந்தபலியைச் சருவேசுரன் பெற்றார். யேசுவின் திருஇருதயம், மரியாயின் திருஉதரத்திலே கருவான அச்சணமுதல் தம்மை எல்லோரது நன்மைத்தனத்துக்காகவும் பலியிடத்தவறியதில்லை.

### உன்னதபலி

மாசுமறையற்ற செம்மறியைத்தான் அன்று தமக்குப் பலியிடவேண்டும் என்று சருவேசுரன் கட்டளையிட்டார். இது அளவற்ற பரிசுத்ததனம் பொருந்திய சருவேசுரனுடைய செம்மறிப் புருவையைத்தான் குறிப்பதாயிருந்தது. பலிசெலுத்தப்பட்ட செம்மறிகள் சத்தமிடாமல் வெட்டப்படவேண்டும் என்பதும் ஆரோனுக்கும் அவரைத் தொடர்ந்துவந்த குருமாருக்கும் கட்டளையிடப்பட்டிருந்தது. நமது இரட்சகராகிய யேசுநாதர் தமதுபாடுகளின் போது அனுசரித்த பொறுமையையும், மட்டற்ற மௌனத்தையும் இது எடுத்துக்காட்டுவதாய் முற்குறியாக விளங்கியது. இன்னும், தலைமைக் குருவே அதிபரிசுத்த தலத்தினுள் வெட்டப்பட்ட ஆட்டுக்கடாவின் இரத்தத்தைக் கொண்டுபோய்ச் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தார். யேசுவின் திருஇருதயமோ அன்று இஸ்ராயேல் மக்கள் பழைய ஏற்பாட்டின்படி சருவேசுரனுக்குரிய உவப்பான பலிகளுக்கெல்லாம் நிகராக — அவற்றிற்கு மேலாக, அவற்றைக்கடந்த திருஇரத்தப்பலன்களைக் கொண்டதாக, எங்களின் இரட்சிப்பாகச் சிந்தப்பட்டதன்றோ. இது தேவகுமாரனுடைய இரத்தம். எங்கள் சார்பிலும் முழு உலகத்தின் சார்பிலும் யேசுவின் திருஇருதயம் பரமபிதாவிடம் பரிந்துபேசுகிறவராக இருக்கிறார். அவருடைய இருதயம் பிதாவைநோக்கியவாறு தமது அளவில்லாப் பேறுபலன்களை எடுத்துக்காட்டிச் சருவேசுரனுடைய இரக்கத்தை வேண்டிக்கொண்டே இருக்கிறது. நாமும் அந்த அன்பின் இருப்பிடத்தை சிநேகத்தின் அடைமானத்தை எப்பொழுதும் வேண்டிக் கொள்ளவேண்டும். நமது செபங்கள், பரித்தியாகங்கள், சிலுவைகள், சஞ்சலங்கள் யாவையும் அவருக்கு ஒப்புக் கொடுத்து நமக்காக அவரை மன்றாடும்படி கேட்கவேண்டும். விசேஷமாக நமது பலிபீடங்கள் நாள்தோறும் இந்த உன்னதபலி, உண்மையானசிநேகப்பலி தம்மைத்தாமே பலியாக்கும் பொழுது நாமும் அந்தப்பலியுடன் ஒன்றுசேர்ந்து அவருடைய செபத்துடன் நமது செபங்களையும் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்.

### நான்கு உறைவிடங்கள்

யூதமக்களுடைய வாக்குத்தத்தப் பேழையைப்போலவே யேசுவின் திருஇருதயமும் நான்கு வாசஸ்தலங்களைப் பெற்றிருந்தது. முதலாவதாகத் தேவதாயாருடைய திருஉதரத்திலே தற்காலிகமாகச் சிறிதுகாலக் தங்கியிருந்தது. பின்னர் யேசுநாதருடைய திருஇருதயம் இவ்வுலகில் மானிடரூபமாய் 33 வருடகாலம் உலாவித்திரிந்தது. மூன்றாவதாகப் பரலோகத்தில் தமது பரமபிதாவின் வலதுபாரிசத்தில், அங்கே அவர் நித்தியத்துக்கும் அரசு செய்வார். நான்காவது திவ்விய நற்கருணையிலே நம்மோடு உலகமுடியுமட்டும் இருந்துவருவார்.

### நாம்பெற்ற பாக்கியம்

பழைய உடன்படிக்கையிலே ஒரு வருடத்தில் ஒருமுறைமாத்திரம் பெரிய குரு அதிபரிசுத்த தலத்தில் பிரவேசிப்பார். நாமோ யேசுவின் திருஇருதயத்தினுள் எப்பொழுதும் செல்லமுடியும். அவருடைய போதனைகளை, ஆசைகளை, பரமபிதாவையும், மனுக்குலத்தையும் அவர் நேசித்த பான்மையையும் நமது உள்ளத்திற் சிந்தித்துத் தியானிப்பதன்மூலம் நாம் அந்தத் திருஇருதயத்துள் செல்லமுடியும். யாவற்றுக்கும்மேலாகச் சருவேசுரனுக்குச் செலுத்தப்படும் சிநேகக் கிரிகைகளினாலும், நிகரற்ற பலியாகிய திவ்விய பலிபூசையில் பங்குபற்றுவதாலும், நமது துன்பங்கள், சிலுவைகள் யாவற்றையும் அப்பலியுடன் ஒன்றிப்பதாலும் நாம் இன்னும் நெருக்கமாகச் சருவேசுரனுடைய உன்னதவாசஸ்தலத்தில் செல்லமுடியும்.

பெரியகுருவும் அவரது பரிவாரமும் ஒருமுறைமாத்திரம் அதிபரிசுத்ததலத்தில் சருவேசுரனுடைய வாசஸ்தலத்தை அடையமுடியும்; நாமோ அன்பின் தேவதிரவிய அனுமானமாகிய திவ்விய நற்கருணையைப் பெற்றுக் கொள்ளும்போதெல்லாம் யேசுவின் திருஇருதயத்துள் செல்லுகிறோம். அவரோடு ஒன்றித்து நாம் அவரிலும், அவர் எம்மிலும் வாசம்பண்ணும் பாக்கியம் நமக்குக்கிடைத்துள்ளது.

யேசுநாதருடன் நாம் ஒன்றித்து வாழ்வோமானால யேசுநாதருடைய செபங்களுக்கும், பாவப்பரிகாரங்களுக்கும், அவருடைய திருஇரத்தப்பலன்களுக்கும், பரிந்துபேசுதலுக்கும் தகுந்த பலன்களாக, கைம்மாறாக நாம் இருப்போம். அவருடைய வேண்டுதல்களும், பாடுகளும் பலன் அளிப்பவையாகஇருக்க—அவற்றிற்கு நாம்பாத்திரவான்களாகத் திகழ்வோமாக. "உன்னத தேவனின் வாசஸ்தானமாகிய யேசுவின் திருஇருதயமே எங்கள்பேரில் இரக்கமாயிரும்."

## கிறீஸ்தவ மனிதன்

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

தன் கொள்கைகளைப் பரப்பவும் முடியும், அழிக்கவும் முடியும். இதே ரீதியில் நோக்கினால் உலகின் ஒளியாகிய கிறிஸ்தவர்கள் இம்மட்டில் ஆற்றும் பணி எவ்விதம் இருக்கின்றது? 'படிப்பது திருவாசகம், இடிப்பது சிவன் கோவில்' என்பதை எம் கிறிஸ்தவர்கள்மட்டில் எவ்வித தயக்கமுமின்றி இலகுவாக நாம் கையாளலாம். அன்பின் மதத்தைக் கைளாளுவோர் அகத்தில் அன்பில்லை, மனுவுக்காகத் தன் உயிரை ஈந்த யேசுவின் உடலினின்று அன்று சிந்திய திருஉதிரத்தில் உருவாகிய மெய் நெறியில் வாழும் கிறிஸ்தவர்களிடத்தில் தியாகம் என்ற சொல்லுக்கு அர்த்தமில்லை. இந்த நிலையில் நாம் எம் நோக்கத்தைப் பூர்த்திசெய்கின்றோமா? ஆகமங்கள் முழுவதும் செறிந்திருக்கும் நீதிமொழிகளும், நல்லொழுக்கமும் சொல்லளவில் மட்டும் தானா? நாம் உண்மையில் கிறிஸ்தவர்களா? இல்லையெனில் மனிதராகவாவது வாழ்வதுண்டா? இல்லை. இரண்டுங்கெட்டான் நிலையா? சிந்தனையை ஓடவிடுங்கள், பிறகு திருந்திநடவுங்கள். அதன் பிறகுதான் நாம் ஒவ்வொருவரும் ஒரு 'கிறிஸ்தவ மனிதன்' ஆவோம்.

### நன்றித்துதி

நற்கருணை நாதரிடம் பரி சதாசகாய மாதா, அர்ச். யூதாததேயு, அர்ச். ஆரோக்கியநாதர் இவர்களின்மூலம் கேட்டு அடைந்துகொண்ட அனுகூலத்திற்கு நன்றியாக இதைப் பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்.

* * *

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதயநாதரின் இரக்கத்தாலும், அர்ச். றீற்றம்மாளின் வேண்டுதலாலும் யான்கேட்ட மன்றாட்டுக் கிடைத்தது. பிரசுர தாமதத்திற்கு மன்னிப்புக்கோரி, நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

உமது அடியாள்.

கரம்பன்

* * *

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவின் இரக்கமான அருளினால் என்னைப்பீடித்திருந்த கஷ்டமானவியாதி பூரணகுணமடைந்தது நன்றியாக இதனைப் பிரசுரிக்கிறேன்.

ஒரு பக்தன்


அல்ஸ்ட்ரன்

மீன்பிடி வலைகள்




அல்ஸ்ட்ரன் மட்டுமே இவ்வனுகூலங்கள் அனைத்தையும் அளிக்கவல்லது.

CIC அல்ஸ்ட்ரனின் விசேஷத் தன்மைகளை மற்ற நார்களுடன் ஒத்திட்டுக் காட்டும் இலவசப் புத்தகம் ஒன்றை பெற இன்றே எமக்கு எழுதுக.

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ்(கொழும்பு)லிமிடெட்,
தபால் பெட்டி 352, கொழும்பு.
35


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## ஆசனக்கோவிலில் ஆவணித்திருநாள்

பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதாவின் கோவிலிலே ஆவணித்திருநாளென்று அறியப்படுவதாகிய தேவதாயாரின் மோட்சாரோபணத்திருநாள் நிகழும் ஆவணி15-ந்திகதி வழமைபோலக் கொண்டாடப்படும். திருநாளுக்கு முந்திய நவதினதிருவிழாக்கள் சென்ற 6-ந்திகதிவியாழக்கிழமை ஆரம்பமாகி அமைதியாகவும், பக்திச்சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன.

## யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டின் இரண்டாவதுபருவவிசாரணை சென்ற 30-ந்திகதிவியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. நீதியரசர் எச். டபிள்யு. தம்பையா, கியூ. சி. அவர்கள் விசாரணை நடத்திவருகின்றார். முதலாவதாக, மட்டுவில் கொலைமுயற்சிவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் முதலாவதுசாட்சி யாதோகூறியதின் பேரில் இந்தவழக்கு வேறுயூரிமாரால் விசாரணைசெய்யப்படுமாறு இம்மாதம் 25-ந்திகதிக்குப் பின்போடப்படலாயிற்று.

## ஊர்காவற்றுறைக்கு மின்சாரம்

ஊர்காவற்றுறைப் பட்டினத்திற்கும், நாரந்தனை, வேலணை, காரைநகராகிய கிராமங்களுக்கும் அதிகம் விரைவிலே மின்சாரம் கிடைக்கவிருக்கிறது. இவற்றிற்கு மின்சாரம் வழங்குதற்கென நிதிஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும், அதிகம்விரைவிலே இத்திட்டம் நடைமுறைக்கு வருமென்றும் இதுவிஷயமாகச் சென்றிருந்த ஒரு தூதுக்குழுவிடம் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது.

## ஆசிரியர்களும் இனத் துவேஷமும்

பாடசாலைகளிலே இனத்துவேஷம்–அதாவது வகுப்புத்துவேஷத்துக்கு ஊக்கமளிக்கும் ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும் பதவிநீக்கம்செய்யப்படுவாரெனக் கல்விமந்திரி எச்சரித்து ஓர்உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றார். இனத்துவேஷத்தையும், மதத்துவேஷத்தையும் களைந்தெறிந்தால்தான் பாடசாலைகளில் ஒழுங்கைநிலைநாட்ட முடியுமென அவர்தெரிவித்து, மாணவர்களை நற்பிரஜைகள் ஆக்குவதே கல்வியின் இலட்சியமென்றும், தீவிரவாதிகளான ஆசிரியர்கள் இன, மதத்துவேஷத்தைப்பரப்பி மாணவர்களைச் சமூகவிரோதிகள் ஆக்குகின்றனரென்றும், ஆகவே, பாடசாலைகளின் இன, மதத் துவேஷங்கொண்ட ஆசிரியர்கள் நீக்கப்படவேண்டுமென்றும் கூறி எச்சரித்திருக்கின்றார்.

## தமிழுக்குத் தகுந்தஇடம்

"இந்தநாட்டை அடிமைப்படுத்தவோ அன்றேல் தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்துக்கொடுக்கவோ நாம்தயாராயில்லை; சிங்களமே இந்தநாட்டின் ஆட்சிமொழியாகவிருக்கும்; அதே சமயத்தில் தமிழுக்கும் தகுந்தஇடம் கொடுக்கப்படும்" என்று போக்குவரத்துமந்திரி அனில் முனசிங்கசென்ற வெள்ளிக்கிழமை இரத்தினபுரியிலே நடைபெற்ற கூட்டமொன்றில் பேசியிருக்கிறார்.

## புதியமாநகர சபைகள்

திருகோணமலை, கோட்டே, இரத்தினபுரி, மொறட்டுவாஎனும் நான்கு நகர்களிலும் இருந்துவரும் நகரசபைகளுக்கு மாநகரசபை அந்தஸ்து வழங்குவதெனத் தலதாபன–உள்நாட்டுமந்திரி தீர்மானித்துள்ளார். தலதாபன கமிஷனர்செய்த சிபாரிசின்பேரிலேயே இவ்வாறு தீர்மானிக்கப்படலாயிற்று.

## இலங்கை வங்கியின் வெள்ளிவிழா

இலங்கை வர்த்தகசங்க கட்டிடத்தின் அமைதியான ஒருசூழ்நிலையிலே 1939-ம்ஆண்டு ஆவணிமாதம் 1-ந்திகதியன்று ஸ்தாபிக்கப்பட்ட இலங்கைவங்கி தனது 25-ம்வருட நிறைவாகிய வெள்ளியூபிலிவிழாவை இந்த ஆவணிமாதம் 1-ந்திகதி சனிக்கிழமை கொண்டாடியது. இந்தவங்கி சென்ற கால்நூற்றாண்டிலும் இலங்கையிலுள்ள மிகப்பெரிய ஒருவங்கியாகி இன்று இந்நாடு பெருமைப்படக்கூடிய ஒரு ஸ்தாபனமாகத் திகழ்கின்றது.

## தமிழும் சிங்களவரும்

தென்னிலங்கையிலே எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்தியடைந்த சிங்கள இளைஞர்களும், பெண்களும் வடக்கு–கிழக்கு மாகாணங்களுக்கு ஆசிரியர்களாகத் தெரியப்படுவதற்காகத் தற்பொழுது மும்முரமாய்த் தமிழ்படித்து வருகிறார்கள். தமிழைவெறுத்தவர்கள் பலர் இன்று தனிப்பட்ட தமிழ்வகுப்புகளுக்குச்சென்று தமிழ்கற்பதுவெளிப்படையானது. பலசிங்களக்கிராமங்களிலே தற்பொழுது தமிழ்வகுப்புகள் நடைபெறுவதாகத் தெரியவருகிறது.

## புதியபிரதம நீதியரசர்

இதுவரை இலங்கைப் பிரதமநீதியரசராய் இருந்துவந்த திரு. எச். எச். பஸநாயக்க, கியூ. சி. அவர்கள் ஆவணி 3-ந்திகதியாகிய சென்றதிங்கட்கிழமை நீதிப்பரிபாலன சேவையிலிருந்து இளைப்பாறியிருக்கின்றார். அதனால் இவரிடமாகப் புதியபிரதமநீதியரசராய்த் தற்போது புரட்சிச்சதிவழக்கு விசாரணையிலே தலைமைநீதியரசராகக் கடமையாற்றிவருகின்ற திரு. எம். சி. சன்சோனிஅவர்கள் மறுநாள்4-ந்திகதிமுதல் பிரதமநீதியரசராக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார் இவர் 1937-ம்ஆண்டு நீதிப்பரிபாலன சேவையில்சேர்ந்து நீதிபதியாகவும், மாவட்டநீதிபதியாகவும், அசைஸ் கமிஷனராகவும் பதவிஉயர்ச்சிபெற்று வந்து 1954-ம்ஆண்டு உதவிநீதியரசராயினர்.

## புதிய உதவிநீதியரசர்கள்

1952-ம்ஆண்டு ஐப்பசிமாதமுதல் அசைஸ்கமிஷனராகக் கடமையாற்றிவந்துள்ள திரு. வி. மாணிக்கவாசகர் அவர்களும், 1962-ம்ஆண்டு ஆடிமாதமுதல் சொலிசிற்றர்–ஜெனறலாகக் கடமைபார்த்துவந்துள்ள திரு.ஏ.சி.ஏ. அலெஸ்அவர்களும் நீதியரசர்களாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கிறார்கள்.

## சிறைக்கைதிகளும் நடனமும்

கண்டியிலுள்ள போகாம்பரைச் சிறைச்சாலையிலே மறியற்காரருக்கு வாரம்ஒருமுறை கல்விப்பகுதியின் வளர்ந்தோர்கல்விப் பிரிவினரால் கண்டியநடனவகுப்புகள் நடத்தப்படுகின்றன. மூன்றுமறியற்காரர் ஏற்கனவே பரீட்சையில் அரங்கேறிவிட்டனர். அவர்களில் ஒருவனான கிறிபண்டா இப்போது தன்னுடைய இரண்டாவது பரீட்சைக்குத் தோற்றியிருக்கிறான்.

## எம். ஈ. பி. தேர்தல்போட்டி

திரு. பிலிப் குணவர்த்தனவைத் தலைவராகக்கொண்ட எம். ஈ. பி. (மக்கள் ஐக்கிய முன்னணி) கட்சியானது அடுத்தபொதுத்தேர்தலிலே 120 அபேட்சகர்களைத்தேர்தலுக்குநிறுத்த—அதாவது 120தொகுதிகளில் போட்டியிடத் தீர்மானித்திருக்கிறது. ஏற்கனவே 50ஸ்தானங்களுக்கு அபேட்சகர்கள் தெரியப்பட்டுவிட்டார்களாம். இவர்களில் ஒருதொகையான வழக்கறிஞர்களும் இருக்கிறார்களாம்.

## மொழிப்பிரச்சினை தீருமா?

மொழிப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துவைக்கத் தற்போது அரசாங்க வட்டாரங்களிலே மிகுந்த அக்கறை காணப்படுவதாகச் செய்திபரந்துள்ளது. மொழிப்பிரச்சினைக்குச் சட்டமூலம் நிரந்தரபரிகாரம் தேடப்படுமென்றும், இதுவிஷயமாக நீதிமந்திரி ஏனையமந்திரிகளுடனும், தமிழ்ப்பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறாரென்றும் சொல்லப்படுகிறது. பண்டா–செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையிலே மொழிப்பிரச்சினைக்குப் பரிகாரம் காணப்படுமென்றும், அந்தஒப்பந்தத்துக்குப் புத்துயிர் அளிக்க அரசாங்கம் ஆதரவாயிருக்கிறதென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இடதுசாரி ஐக்கியமுன்னணி

இற்றைக்கு ஓர்ஆண்டின்முன் அதாவது சென்ற1963-ம்ஆண்டின் ஆவணிமாதத்திலே பெரும்ஆரவாரத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட இடதுசாரிஐக்கிய முன்னணியானது இந்த 1964-ம் ஆண்டின் ஆடிமாதத்திலே நிலைகுலைந்து இறுதிகண்டுவிட்டது. மக்கள்ஐக்கிய முன்னணிக்கட்சி, கம்யூனிஸ்தகட்சி, லங்கா சமசமாஜகட்சியாகிய மூன்று இடதுசாரிக்கட்சிகளும் ஐக்கியமுன்னணிநிறுவிக் கூட்டாகக் கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கைப்பத்திரங்களை மக்கள்ஐக்கிய முன்னணிக்கட்சியின் பொதுச்செயலாளர் இப்பொழுது கூட்டுச்சேர்ந்த ஏனைய இருகட்சிகளுக்கும் திருப்பிஅனுப்பிவிட்டிருக்கின்றார். டக்றர் என். எம். பெரேராவைத் தலைவராகக்கொண்ட லங்கா சமசமாஜகட்சி அரசாங்கத்துடன் கூட்டுச்சேர்ந்தமையாலே உடன்படிக்கை மீறப்பட்டு இடதுசாரிஐக்கிய முன்னணி அழிந்தொழிந்துவிட்டதாகக் குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

## பிரதமரும் பொதுத்தேர்தலும்

"எவர்தான் எதைச்சொன்னபோதிலும் அடுத்தவருடம் பொதுத்தேர்தல் நிச்சயமாக நடந்தேதீரும்; தேர்தல்களத்தில்இறங்க நாம்சிறிதும்அஞ்சவில்லை; நாம் மக்களுக்குச்செய்த நன்மைகளே இதற்குக்காரணம்; அதனால் மக்களின் நம்பிக்கையை நாம் மீண்டும் பெறுவதுதிண்ணம்; காலஞ்சென்றபிரதமர் காட்டியபாதையிலே சுதந்திரக்கட்சி இப்பொழுது சோஷலிஸத்தைநோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது" எனச் சென்ற1-ந்திகதி சனிக்கிழமை சுதந்திரக்கட்சியின் நிர்வாகசபைக் கூட்டத்திலே பிரதமர் ஸ்ரீமாபண்டாரநாயக்கா பேசியிருக்கின்றார்.

## பங்கீட்டரிசி மான்யம்

வருகிற ஐப்பசிமாதம் 1-ந்திகதி ஆரம்பமாகும் புதியநிதிவருடத்திலே பங்கீட்டரிசிமான்யம் 24கோடியே 2இலட்சம் ரூபாவிலிருந்து 28கோடியே 2இலட்சத்து 30ஆயிரம்ரூபாவாக அதிகரித்திருக்கிறது. ஆனால், உள்நாட்டு நெற்கொள்வனவுமான்யம் 19கோடியே 45இலட்சம் ரூபாவிலிருந்து 18கோடியே 93இலட்சத்து 20ஆயிரம்ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.


எண்ணெயில் இயங்கும் நீர் இறைக்கும் யந்திரங்கள்

மின்சாரத்தால் இயங்கும் நீர் இறைக்கும் யந்திரங்கள்

ஹெட்றேலாக் & குளோசினல் தீந்தைகளும் சிநேசமும்

இது ஓட்டோஸ் யாழ்ப்பாணம்

வெல்டிங் சாதனங்களும் உபகரணங்களும்

அல்கதீன் & S – லோன் குழாய்கள்

ஸ்பிறேயர்ஸ் & கிருமிநாசினி

காஸ் ஒக்ஸிசன் அசெற்றிலின் பெற்றோல்

மேற்கண்டவகைகளில் — ஏதாவது —

உங்களுக்குத் தேவையானால் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

ஓட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்

தந்தி: 'ஓட்டோஸ்' தொ. பே. 496

AUTOS LTD., Jaffna.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஆவணிமாதம் 8-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org